ශ්‍රී ලංකා විවෘත විශ්වවිද්‍යාලය

මානව ශාස්ත්‍ර හා සමාජ විද්‍යා පීඨය

නීති අධ්‍යයන දෙපාර්තමේන්තුව

නීතිවේදී උපාධි පාඨමාලාව - V වන මට්ටම

අවසාන පරීක්ෂණය - 2012/2013

පරිපාලන නීතිය - LWU3311

කාලය පැය තුන (03) යි.

---

දිනය - 2013.10.17 වේලාව - ප.ව.01.30- ප.ව. 04.30 දක්වා

---

විභාග අපේක්ෂකයන්ගේ අපැහැදිලි අත්අකුරු සඳහා ලකුණු අඩු කරනු ලැබේ.

මුළු ප්‍රශ්න ගණන 08 යි.

ප්‍රශ්න පහකට (05) පමණක් පිළිතුරු සපයන්න.

01. හේතු ඉදිරිපත් කිරීම අවශ්‍ය කරන බවට පොදු රීතියක් නොමැත්තේ වුවද විනිශ්චයකරුවෝ එකී තත්ත්වයෙන් ඔබ්බට ගොස්, සාධාරණත්වය මගින් ඉල්ලා සිටිනු ලබන විටදී යුක්තිය තහවුරු කිරීම සඳහා හේතු ඉදිරිපත් කිරීම අනිවාර්යය වන බවට පිළිගනිති. මේ වනවිට සාධාරණව ක්‍රියා කිරීමේ යුතුකමට හේතු ඉදිරිපත් කිරීමද ඇතුළත් වන තත්ත්වයකට පැමිණ ඇත. එබැවින් හේතු දැන ගැනීමට ඇති අයිතිය අධිකරණ විමර්ෂණයේ වැදගත් කොටසක් වනවා මෙන්ම පරිපාලන යුක්තියේ අත්‍යාවශ්‍ය අංගයක් ද වේ.

විනිශ්චිත නඩු තීරණ ඇසුරින් ඉහත ප්‍රකාශය සාකච්ඡා කරන්න.

02. කසළ බැහැර කිරීම, ප්‍රතිචක්‍රීකරණය, වීදි පිරිසිදු කිරීම සහ මහජනතාවගේ සමාජ සහ පාරිසරික සුභසාධනය ඇති කිරීම සෝලාපූර් නගර සභාවේ කාර්යයන් සහ බලතල වලට ඇතුලත් වේ. සෝලාපූර් නගරය අධික ජනගහනයකින් යුක්ත වේ. සෝලාපූර් නගරය මධ්‍යයේ පිහිටි, නිවාස වලින් වට වූ ප්‍රධාන වීදිය, ප්‍රධාන දුම්රිය ස්ථානයට සහ ප්‍රාථමික විද්‍යාලයට ප්‍රවේශය ලබා ගැනීම සඳහා ප්‍රදේශවාසීන්ට ඇති එකම මාර්ගය වේ.

නිවාස වලින් නිකුත්වන අපවිත්‍ර ජලය සහ වැසි ජලය මෙම මාර්ගයේ එකතු වන බවට සෝලාපූර් ප්‍රදේශවාසීහු චෝදනා කරති. ජලය ඉවතට ගෙන යාම සඳහා මාර්ගය ඔස්සේ කාණුවක් නොමැති වීම හේතුවෙන් ජලය වීදියෙහි එකතු වීම නිසා එහි මදුරුවන් බෝවීම ආරම්භ වී ඇති අතර ඩෙංගු තර්ජනය ඉහල ගොස් ඇත.

සෝලාපූර් ප්‍රදේශ වාසීන් විසින් කිහිප අවස්ථාවකදීම මෙම අනතුරුදායක තත්ත්වය පිළිබඳව ඔහුගේ අවධානය යොමු කරවන ලෙස නගර සභාවේ සභාපතිවරයාට ලිඛිතව දන්වා ඇත.

ප්‍රදේශවාසීන්ට කරදරයක් සිදුවන ලෙසින් ජලය එකතු වීම වැළැක්වීම සඳහා ඉක්මන් පියවරක් ගන්නා ලෙස ඔවුහු ඉල්ලා සිටියහ.

මෙම කරුණ පිළිබඳව සභාපතිවරයා කිසිදු ක්‍රියාමාර්ගයක් නොගැනීම හේතුවෙන්, නගර සභාවට එරෙහිව කිසියම් හෝ නෛතික පියවරක් ගත හැකි දැයි සෝලාපුර් ප්‍රදේශ වාසීහු ඔබෙන් විමසති.

ඔවුන්ට උපදෙස් දෙන්න.

03. ජාතික නව නිර්මාණකරුවන්ගේ මණ්ඩලය, නව නිර්මාණකරුවන් ධෛර්යමත් කිරීම සහ ඔවුන්ගේ නිෂ්පාදනයන් අලෙවි කර ගැනීමට උපකාර කිරීම සඳහා ජාතික නිර්මාණකරුවන් පිළිබඳ පනත මගින් ස්ථාපනය කරන ලද ව්‍යවස්ථාපිත මණ්ඩලයකි. පේටන්ට් සහ වෙළඳ ලකුණු පිළිබඳ පනත මගින් ස්ථාපනය කරන ලද ව්‍යවස්ථාපිත මණ්ඩලයක් වන පේටන්ට් සහ වෙළඳ ලකුණු පිළිබඳ දෙපාර්තමේන්තුවෙන් තාක්ෂණික වාර්තාවක් ලබා ගැනීමෙන් අනතුරුව, ඕනෑම ක්ෂේත්‍රයක නව නිර්මාණකරුවන් සඳහා මූල්‍යමය ආධාර සහ නෛතික සහය ලබා දීමට මණ්ඩලයට බලය ඇති බව පනතේ සඳහන් වේ. මණ්ඩලය මගින් ගනු ලබන තීරණය අවසානාත්මක සහ තීරණාත්මක වන බවත් කිසිදු අධිකරණයක දී අභියෝගයට ලක් කළ නොහැකි බවත් ජාතික නව නිර්මාණකරුවන් පිළිබඳ පනතේ එක් විධිවිධානයක සඳහන් වේ.

විරුද්ධ දේශපාලන පක්ෂයේ නමගිය ආධාරකරුවකු වූ සහන් තමා විසින් නිර්මාණය කරන ලද විදුලිය අවම වශයෙන් දහනය වන බල්බයක් නිෂ්පාදනය කිරීම සඳහා වන අයදුම්පතක් මණ්ඩලයට ඉදිරිපත් කළේය. ඔහු මෙම බල්බය සඳහා අදාල පේටන්ට් බලපත්‍රය ලබා ගෙන තිබුණි. කෙසේ වුවත් මණ්ඩලය විසින් සහන් බාර දෙන ලද අයදුම්පත පේටන්ට් හා වෙළඳ ලකුණු පිළිබඳ දෙපාර්තමේන්තුවට යොමු නොකරම ප්‍රතික්ෂේප කරන ලදී.

තමාගේ අයදුම්පත මණ්ඩලය විසින් ප්‍රතික්ෂේප කිරීම පිළිබඳව සහන් විමසා සිටීමේදී මණ්ඩලයේ සභාපතිවරයා දක්වා සිටියේ මණ්ඩලයේ තීරණය අවසානාත්මක හා තීරණාත්මක වන බවයි.

සභාපතිවරයාගේ තීරණය සාර්ථකව අභියෝගයට ලක්කළ හැක්කේ කුමන පදනම් යටතේ ද යන්න පිළිබඳව සහන් ඔබගෙන් උපදෙස් පතයි. ඔහුට උපදෙස් දෙන්න.

සැලකිය යුතුයි. - සංශෝධිත 1972 අංක 18 දරණ අර්ථ නිරූපණ ආඥා පනත රටතුල අදාල වේ.

04. *Anisminic Ltd v Foreign Compensation Commission* (1969)2 WLR 163 නඩුතීරණය, ව්‍යවස්ථාව මගින් අධිකරණ විමර්ශණය බැහැර කරන්නා වූ අවස්ථා වලදී පවා බලාතික්‍රමණ මූලධර්මයේ අර්ථය පුළුල් කරන ලද විශිෂ්ට නඩු තීරණයක් වේ.

ඔබ ඉහත ප්‍රකාශය හා එකඟ වන්නේ ද? අදාල නඩු තීරණ ඇසුරෙන් ඔබේ පිළිතුර තහවුරු කරන්න.

05. පහත අභිනියෝජනයන්හි වලංගුභාවය තීරණය කරන්න.

(අ) භාණ්ඩ හා සේවා පනත මගින්, පනතේ පළමු උපලේඛනයේ විශේෂයෙන් සඳහන් කරන ලද භාණ්ඩ මත වෙළඳ බද්දක් පනවනු ලැබුවේය. බදු වලින් නිදහස් කලහැකි විශේෂිත අයිතමයන් පනතේ දෙවන උපලේඛනයේ දක්වා ඇත. පනත යටතේ පිහිටුවන ලද භාණ්ඩ හා සේවා අධිකාරිය විසින් දෙවන උපලේඛනයෙන් සමහර අයිතමයන් ඉවත් කරන ලදී.

(ආ) අධිකාරියේ තීරණවලට එරෙහිව සිදු කරන ලද ඕනෑම අභියාචනයක් එම තීරණය දුන් දිනයේ සිට මාස 6 ක කාලයක් ඇතුලත පළාත් බද මහාධිකරණකට ඉදිරිපත් කළයුතු බව මාර්ග සංවර්ධන අධිකාරී පනත සඳහන් කරයි. අධිකාරියේ සභාපතිවරයා රෙගුලාසියක් පනවමින් දක්වා සිටියේ ඔහුගේ තීරණ වලට එරෙහි අභියාචන සියල්ල මාස තුනක කාලයක් ඇතුලත ඉදිරිපත් කළයුතු බවයි.

(ඇ) ආහාර අධිකාරී පනත මගින් මිල පාලනයෙන් මුක්ත කල හැකි භාණ්ඩ තීරණය කිරීම සඳහා එහි සභාපතිවරයාට බලය පවරනු ලබයි. සභාපතිවරයා විදේශගතව සිටින අවස්ථාවක දී අධිකාරියේ මිල පාලන ඒකකයේ අංශාධිපතිවරයා විසින් සමහර භාණ්ඩ මිල පාලනයෙන් ඉවත් කළේය.

(ඈ) මධ්‍යම ගමනාගමන මණ්ඩල පනත මගින් මණ්ඩලයට අයත් බස් රථවල ගමන් ගන්නා මගීන්ගෙන් ගාස්තුවක් අයකර ගැනීම සඳහා මණ්ඩලයට බලය ලබා දෙනු ලබයි. අවුරුදු 65 ඉක්මවූ ජ්‍යෙෂ්ඨ පුරවැසියන් සඳහා නිදහස් ගමන් බලපත්‍ර ලබාදීමට මණ්ඩලය තීරණය කරයි.

06. පරිපාලන තීරණයක වලංගුභාවය ප්‍රශ්න කිරීම සඳහා කාර්යක්‍ෂම මෙවලමක් ලෙස ප්‍රකාශන ආඥාවන් භාවිතා කල හැකි වුවත්, ශ්‍රී ලංකාවේ ප්‍රකාශන ආඥා නිකුත් කරනු ලබන අධිකරණය කුමක් ද යන්න පිළිබඳව මතභේදයක් පවතී.

ඔබ මේ ප්‍රකාශය සමඟ එකඟ වන්නේ ද?

07. සේන, ජාතික විශ්වවිද්‍යාල මුද්‍රණාලයේ ගබඩා පාලකවරයා විය. රුපියල් ලක්ෂයක වටිනාකමින් යුතු කඩදාසි තොගයක් සොරකම් කිරීමකට සම්බන්ධව ඔහුව සේවයෙන් ඉවත් කරනු ලැබිණි. මේ කරුණු පිළිබඳව සොයා බැලීම සඳහා උපකුලපතිවරයා විසින් විමර්ෂණ මණ්ඩලයක් පත් කරන ලදී. එහි සභාපතිවරයා වශයෙන් කටයුතු කරන ජ්‍යෙෂ්ඨ කථිකාචාර්යවරයෙකු ද ඇතුළුව සාමාජිකයන් හතර දෙනෙකුගෙන් විමර්ෂණ මණ්ඩලය සමන්විත විය.

විමර්ෂණයට දිනකට පෙර සේනට චෝදනා පත්‍රයක් ලැබිණි. තම නඩුව සඳහා සූදානම් වීමට ප්‍රමාණවත් කාලයක් නොමැති බව දක්වමින් විමර්ෂණය කල් දැමීම සඳහා ඔහු ඉල්ලීමක් කලේය. කෙසේ වුවත් මණ්ඩලය විසින් ඔහුගේ ඉල්ලීම ප්‍රතික්ෂේප කරන ලදී. චෝදනා පත්‍රය චෝදනා තුනකින් සමන්විත වුවත් විමර්ෂණය අවස්ථාවේදී එම චෝදනා තුනම විමර්ෂණය නොකෙරිණි. විමර්ෂණය පවත්වන අතරතුරේ දී සභාපතිවරයාට උපකුලපතිවරයාගෙන් දුරකථන ඇමතුමක් ලැබිණි. දුරකථන ඇමතුමෙන් පසුව ඔහු සේනට එරෙහිව ඇති නව චෝදනාවක් සම්බන්ධයෙන් සේනගෙන් පැහැදිලි කිරීමක් ඉල්ලා සිටියේ ය.

විමර්ෂණයෙන් අනතුරුව විමර්ෂණ සභාවේ සභාපතිවරයා තම වාර්තාව උපකුලපතිවරයා වෙත බාර දුන්නේ ය. වාර්තාව මත පදනම්ව උපකුලපතිවරයා විසින් සේන සේවයෙන් නෙරපා හරින ලදී.

සේවයෙන් නෙරපා හැරීම සම්බන්ධයෙන් සේන ඔබගේ උපදෙස් පතයි.

ඔහුට උපදෙස් දෙන්න.

08. පරිපාලන අධිකාරීන්ට අභිමතානුසාරී ලෙස කටයුතු කිරීමට ලබා දී ඇති බලය යනු අත්තනෝමතික ලෙස ක්‍රියා කිරීමට දී ඇති බලයක් නොවේ. එය පරම බලයක් නොවන අතර යහ පාලනය පිළිබඳ ප්‍රකාශිත කොන්දේසි නොසලකා හරිමින් සහ ව්‍යවස්ථාපිත සීමා කිරීම් අභිබවා යමින් අභිමතය ක්‍රියාවේ යෙදවීම සඳහා අදාල අධිකාරියකට බලය ලබා දෙන්නක් ද නොවේ.

අභිමතානුසාරී බලය පිළිබඳ අධිකරණමය පාලනය ඇසුරෙන් ඉහත ප්‍රකාශය විවේචනාත්මකව සාකච්ඡා කරන්න.

***හිමිකම් ඇවිරිණි.***

**THE OPEN UNIVERSITY OF SRI LANKA**
**FACULTY OF HUMANITIES AND SOCIAL SCIENCES**
**DEPARTMENT OF LEGAL STUDIES**
**LL.B DEGREE PROGRAMME – LEVEL V**
**FINAL EXAMINATION – 2012/2013**
**LWU3311 – ADMINISTRATIVE LAW**
**DURATION: 03 HOURS**

**DATE: 17th October 2013** **TIME: 1.30 p.m. – 4.30 p.m.**

**Total No. of Questions : 08**

**Number of questions to be answered: 05**

**Candidates will be penalized for illegible handwriting.**

1. Although there is no general rule of law requiring the giving of reasons, judges have gone far towards ensuring justice by holding that reasons must be given where fairness so demands. It has now arrived at the point where the duty to act fairly includes the giving of reasons. A right to reasons is therefore an indispensable part of a sound system of judicial review and also an essential element of administrative justice.'
   Discuss the above statement with reference to decided cases.

2. The functions and duties of the Municipal Board of Solapur include waste disposal and recycling, street cleaning, and promoting the social and environmental wellbeing of the community. The city of Solapur is densely populated. The main street in the center of Solapur city which is surrounded by houses is the only street available for the residents to gain access to the central railway station and the primary school.

   The residents of Solapur allege that water, including dirty water from the houses and rain water has accumulated in the street. Since there is no drain along the street to carry away the water, it remains stagnant along the street and mosquitoes have started breeding, increasing the danger of dengue.

The residents of Solapur have written to the Chairman of the Municipal Board several times drawing his attention to this danger. They have requested that immediate steps be taken to prevent the stagnation of the water which is causing a nuisance to the residents of the area.

As the Chairman has not taken any action on this matter, the residents of Solarpur consult you as to whether any legal action could be taken against the Municipal Board.

Advise them.

3. The National Inventors Board is a statutory body established under the National Inventors Act to encourage inventors and help them to market their products. The Act states that the Board is empowered to grant financial and legal assistance to inventors in any field after obtaining a technical report from the Department of Patents and Trade Marks which is a statutory body established under the Patents and Trade Marks Act. One of the provisions of the National Inventors Act declares that 'the decision of the Board is final and conclusive and cannot be challenged in any court of law.'

Sahan who was a known supporter of the opposition political party had made an application to the Board to manufacture a bulb which he had invented and which consumes minimal electricity. He had obtained the relevant patent for this bulb. However the Board, without referring the application to the Department of Patents and Trade Marks refused the application submitted by Sahan. When Sahan inquired as to why the Board had refused his application, the Chairman of the Board merely stated that the Board's decision was final and conclusive.

Sahan seeks your advice as to the grounds on which he could successfully challenge the decision of the Chairman.

Advice him.

Note that the Interpretation Ordinance as amended by the Interpretation (Amendment) Act No.18 of 1972 is applicable in the country.

4. *Anisminic Ltd v Foreign Compensation Commission* 1969 2WLR 163 is a remarkable case which expanded the meaning of the *ultra vires* principle even when the statute provides for exclusion of judicial review.

   Do you agree with the above statement? Support your answer with relevant case law.

5. Decide the validity of the following delegations.

   (a) The Goods and Services Act imposed sales tax on certain goods specified in the first schedule to the Act. The second schedule to the Act specified items that can be exempted from Tax. The Goods and Services Authority established under the Act deleted several items from the second schedule.

   (b) The Road Development Authority Act specified that any appeal against the decision of the Authority should be made to the Provincial High Court within 6 months from the date of such decision. The Chairman of the Authority enacts a regulation which declared that all appeals against his decision should be made within 3 months.

   (c) The Food Authority Act grants power to its Chairman to determine goods that should be exempted from price control. When the Chairman was away from the country, the Head of the Price Control Unit of the Authority exempted some goods from price control.

   (d) The Central Transport Board Act authorized the Board to charge fees from passengers on buses belonging to the Board. The Board decided to grant free travel passes to senior citizens over the age of 65 years.

6. Although the declaratory order serves as an effective method of questioning the validity of administrative decisions, there is controversy as to the forum which should issue such declaratory orders in Sri Lanka.

   Do you agree with the above statement?

7. Sena was a store keeper of the National University Press. He was dismissed from service as he was implicated in the theft of paper valued at Rs. 100000/=. A Board of Inquiry was appointed by the Vice Chancellor to look into the matter. The Board of Inquiry consisted of four members including one Senior Lecturer who served as the Chairman.

Sena received a charge sheet a day before the inquiry. He requested a postponement of the inquiry stating that he did not have sufficient time to prepare for his case. However the Board refused his request. The charge sheet contained three charges, but at the inquiry the three charges were not inquired into. While the inquiry was going on the Chairman received a phone call from the Vice Chancellor. After the call he sought clarification from Sena regarding a new allegation made against him.

After the inquiry the Chairman of the Board of Inquiry submitted his report to the Vice Chancellor. Based on the report the Vice Chancellor dismissed Sena from service.

Sena seeks your advice regarding his dismissal.

Advise him.

8. 'The power given to an administrative authority to act in its discretion is not a power to act arbitrarily. It is not an absolute power and does not enable the authority concerned to exercise discretionary powers in excess of the statutory limitations and disregarding the prescribed conditions for good governance. '

Critically discuss the above statement in the light of the judicial control of discretionary power.

*** *Copyrights reserved* ***

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**மானுடவியல் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்**
**சட்டக்கற்கைகள் திணைக்களம்**
**சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் - V**
**இறுதிப் பரீட்சை– 2012/2013**
**நிருவாகச் சட்டம் - LWU 3311/4331**
**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

**திகதி: 17.10.2013** **நேரம்: பி.ப 1.30 – பி.ப 4.30**

**வினாக்களின் மொத்த எண்ணிக்கை 08**
**விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை 05**
**தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.**

01. "காரணங்களைக் கொடுக்க வேண்டும் என்ற தேவைப்படுத்துகை பொதுவாக சட்ட ஆட்சிக் கோட்பாட்டில் காணப்படாத போதிலும், நியாயமாகச் செயற்படும் கடமையுள்ள வேளையானது, காரணங்கள் கொடுப்பதையும் உள்ளடக்கி இருக்கிறது என்ற ஒரு நிலைப்பாட்டிற்கே இப்போது அது வந்துள்ளது. நியாயமானத் தன்மை, அவ்வாறாக கோருகின்ற வேளையில் காரணங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டினால், நீதியை உறுதிப்படுத்திக்கொள்ளும் நோக்கில் நீதிபதிகள் வெகுதூரம் சென்றும் உள்ளார்கள். எனவே, காரணங்களைப் பெற்றுக்கொள்ளுதல் என்னும் உரிமையானது, நீதியியல் மீளாய்வை நேர்த்தியான முறைமையில் இன்றியமையாத பகுதி ஒன்றாகுவதுடன், நிர்வாக நீதியில் அத்தியாவசியமான மூலகமொன்றாகவும் அது காணப்படுகின்றது."

தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புபடுத்தி மேற்போந்த கூற்றினை ஆராய்க.

02. சோலாப்பூரின் மாநகர சபையின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள், கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் மீள் சுழற்சியில் இடல், வீதியைத் துப்புரவாக்குதல் மற்றும் சமூகத்தின், சமூக மற்றும் சுற்றாடல் என்பவற்றின் நலனோம்புகையை முன்னேற்றுதல் என்பவற்றை உள்ளடக்கியிருக்கிறது. அந்த சோலாப்பூர் நகரமானது, அடர்த்தியான சனத்தொகையைக் கொண்டிருக்கிறது. சோலாப்பூரின் மத்தியிலுள்ள பிரதான வீதி வீடுகளால் சூழப்பட்டிருக்கின்றதுடன், மத்திய புகையிரத நிலையம், மற்றும் ஆரம்பப் பாடசாலைகள் என்பவற்றுக்கு அங்கு வசிப்பவர்கள் போய் வருவதற்குமான ஒரேயொரு பாதையாகவும் அது காணப்படுகிறது.

சோலாப்பூரில் வசிப்பவர்கள் அங்குள்ள வீடுகளில் இருந்து வரும் அசுத்தமான நீர் மற்றும் மழை நீர் என்பன அவ்வீதியில் தேங்கி நிற்பதாக சார்த்துகை செய்கிறார்கள். அந்த நீர் பாய்ந்தோடிச் செல்வதற்கான முறையான கால்வாய் எதுவும் இல்லாதபடியால், அந்த வீதியிலேயே தேங்கியிருப்பதுடன், நுளம்புகள் பெருகத் தொடங்கியுள்ளதுடன், டெங்குக் காய்ச்சலுக்கான அபாயமும் அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். அந்த மாநகர சபையின் தலைவருக்கு, இந்த அபாயம் பற்றிக் கருத்திற்கொள்ளுமாறு சோலாப்பூரின் வாசிகள் பலதடவைகள்

எழுதியும் உள்ளார்கள். அந்தப் பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு தொல்லையை விளைவிக்கும் பாங்கே அங்கு நீர் தேங்கி நிற்பதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறும் அவர்கள் கோரியுள்ளார்கள். இந்த விடயம் தொடர்பில் மாநகர சபைத் தலைவர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கத் தவறியுள்ள வேளையில், அந்த மாநகர சபைக்கு எதிராக சோலாப்பூரில் வசிப்பவர்களால் ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட முடியுமா? என்பது பற்றி உம்மிடம் ஆலோசனையை கேட்கிறார்கள்.

அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

03. ஒரு நியதிச்சட்ட நிறுவனமாகிய தேசிய புதியதைக் கண்டுபிடிப்பாளர்களின் சபையானது, தேசிய புதியதை கண்டுபிடிப்பாளர்களின் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. அது, கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிப்பதற்கும், அவர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கும் உதவும் முகமாக, ஆக்க உரிமைகள் மற்றும் வியாபாரப் குறிகள் எனும் நியதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள, ஆக்க உரிமைகள் மற்றும் வியாபாரக் குறிகள் திணைக்களத்திடம் இருந்து, தொழில்நுட்ப ரீதியான அறிக்கை ஒன்றினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், எத்துறையிலும் கண்டுபிடிப்பாளர்களுக்கான, நிதியியல் மற்றும் சட்டம் சம்பந்தமான உதவிகளை வழங்குவதற்கு, அந்தச் சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக, மேற்படி நியதிச்சட்டம் எடுத்தியம்புகிறது. அந்த தேசிய கண்டுபிடிப்பாளர்களுக்கான சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுள் ஒன்று வெளிப்படுத்துவதாவது, ''அந்தச் சபையின் தீர்மானம் இறுதியானதும் முடிவாந்தன்மை கொண்டதுமாகும்'' என்பதுடன், எந்த நீதிமன்றத்திலும் சவாலுக்குட்படுத்திக்கொள்ள முடியாது'' எனவும் ஆகும்.

எதிர்த்தரப்பு அரசியல் கட்சியின் மிகப் பிரபல்யமான ஆதரவாளரான சகான் என்பவன், அதிகுறைந்த மின்சாரத்தினை நுகர்வுகின்றதும், தான் கண்டுபிடித்ததுமான மின்குமிழ் ஒன்றினை உற்பத்தி செய்வதற்கான மனுவொன்றை, அந்தச் சபைக்கு அவன் செய்துள்ளான். அந்த வகை மின் குமிழ் தொடர்பாக ஆக்க உரிமையையும் அவன் பெற்றிருந்தான். மேலும் அச்சபையானது, சகானுடைய விண்ணப்பத்தினை ஆக்க உரிமைகள் மற்றும் வியாபாரக் குறிகள் தொடர்பான திணைக்களத்திற்கு சமர்ப்பிக்காமலேயே அவனால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மனுவை நிராகரித்திருந்தது. அச்சபையானது, அவனுடைய விண்ணப்பத்தினை ஏன் நிராகரித்திருந்தது என சகான் விசாரணை செய்த போது, சபையினுடைய தீர்மானமானது, இறுதியானதும் முடிவான்தன்மை கொண்டதும் என அந்தச் சபையின் தலைவர், வெறுமனே கூறியிருந்தான்.

அந்தச் சபையின் தலைவரின் முடிவினை அக்காரணங்களின் அடிப்படையில் சவாலுக்குட்படுத்த முடியுமா? என உம்முடைய ஆலோசனையை சகான் கோருகின்றான்.

அவனுக்கு ஆலோசனை வழங்குக.

1972 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின் ஒத்த பிரயோகமானது இந்த நாட்டிலும் ஏற்புடைத்தாகும் என கருதிக்கொள்க.

04. நீதியியல் மீளாய்வு என்பதனை தவிர்ப்பதற்கான நியதிச்சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், வலுவிகழ்தல் கோட்பாட்டின் அர்த்தத்தினை விரிவாக்கம் செய்துள்ளமை தொடர்பில் Anisminie Ltd v Foreign Compensation Commission 1969 2 WLR 163 என்பது குறிப்பிடக்கூடிய வழக்கொன்றாக காணப்படுகிறது.

மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடையை சம்பந்தப்பட்ட தீர்ப்புச் சட்டத்தினால் ஆதாரப்படுத்துக.

05. கீழ்க்காணும் கையளிப்புகளின் வலிதுடைமையை தீர்மானிக்குக.

(அ) பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான சட்டம், குறித்த சில பண்டங்களின் மீது சுமத்தப்பட்டு, குறித்தொதுக்கப்பட்ட விற்பனை வரியை மேற்படி சட்டத்தின் முதலாவது பின்னிணைப்பில் காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வரியில் இருந்து விதிவிலக்குக்கு உட்பட்ட சில பொருட்கள், அச்சட்டத்தின் இரண்டாவது பின்னிணைப்பில் காண்பிக்கப்பட்டுள்ளன. அந்தச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான அதிகார சபையானது, பல பொருட்களை அந்த இரண்டாவது பின்னிணைப்பில் இருந்து நீக்கியும் உள்ளது.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகார சபை சட்டமானது, மேற்படி அதிகார சபையின் தீர்மானத்திற்கு எதிரான ஏதேனும் மேன்முறையீடு மாகாண மேல் நீதிமன்றத்திற்கு, அந்த தீர்மானம் எடுக்கப்பட்ட தினத்தில் இருந்து 6 மாதங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஏற்பாடு செய்துள்ளது. மேற்படி அதிகார சபையின் தலைவர் தனது தீர்மானத்திற்கு எதிரான எல்லா முறையீடுகளும் 3 மாதகாலத்திற்குள் செய்யப்பட வேண்டுமெனவும் கூறும் பிரமாணம் ஒன்றைச் செய்திருக்கின்றார்.

(இ) உணவு பற்றிய அதிகார சபை சட்டம், விலைக்கட்டுப்பாட்டில் இருந்து விதிவிலக்களிக்கப்பட்ட பொருட்களை தீர்மானிக்கும் அதிகாரத்தினை அச்சபையின் தலைவருக்கு வழங்கியிருக்கின்றது. அச்சபையின் தலைவர் நாட்டில் இல்லாத வேளையில், விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவின் தலைமை உத்தியோகத்தர், விலைக்கட்டுப்பாட்டில் இருந்து மேலும் சில பொருட்களுக்கு விதிவிலக்களித்திருந்தார்.

(ஈ) மத்திய போக்குவரத்துச் சபை சட்டம் அச்சபைக்குரிய பேருந்துகளின் பயணிகளிடம் இருந்து குறித்த பணத்தினை வசூலிப்பதற்கு அதிகாரமளித்துள்ளது. அச்சபையானது, 65 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயணத்திற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குவதற்கு தீர்மானித்தது.

06. நிர்வாக தீர்மானங்களின் வலிதுடைமையை கேள்விக்குட்படுத்துவதற்கான பயன்விளைவு கொண்ட முறையாக விளம்பற் கட்டளைகள் திகழ்கின்ற போதிலும், இலங்கையில் விளம்பற் கட்டளைகளை எந்த மன்றில் கோரவேண்டும் என்பது தொடர்பில் முரண்பாடு காணப்படுகின்றது.

மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடையை பொருத்தமான தீர்ப்புச் சட்டத்தினால் ஆதாரப்படுத்துக.

07. தேசிய பல்கலைக்கழக அச்சகத்தின் களஞ்சியப் பொறுப்பாளராக சேனா என்பவன் இருந்தான். அவன் ரூபா 100,000 பெறுமதியான கடதாசிகளை களவாடியதாக குற்றம் சுமத்தப்பட்டு, அவனுடைய தொழிலில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டான். அந்த விடயத்தினை கவனித்துக்கொள்வதற்காக துணைவேந்தரினால் ஒரு விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. அவ்விசாரணைக்குழுவின் நான்கு உறுப்பினர்கள் உள்ளடங்கியிருந்ததுடன், அக்குழுவின் தலைவராக முதுநிலை விரிவுரையாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தார்.

அந்த விசாரணைக்கு ஒருநாள் முன்பாக, குற்றப்பத்திரம் ஒன்றை சேனா பெற்றுக்கொண்டான். தனது வழக்கினை தயார்படுத்துவதற்கான போதிய கால அவகாசம் இல்லை எனக் கூறி, அந்த விசாரணையினை பிறிதொரு தினத்திற்கு பிற்போடுமாறு அவன் கேட்டுக்கொண்டான். எனினும், அச்சபையானது, அவனுடைய கோரிக்கையை மறுத்தது. அந்தக் குற்றப்பத்திரத்தில், மூன்று குற்றச்சாட்டுக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆனால், விசாரணையின் போது அந்த மூன்று குற்றச்சாட்டுக்களும் விசாரிக்கப்படவில்லை. அந்த விசாரணையானது இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் அக்குழுவின் தலைவர் துணைவேந்தரிடம் இருந்து தொலைபேசி அழைப்பொன்றை பெற்றுக்கொண்டார். அத் தொலைபேசி அழைப்பின் பின்னர் சேனாவுக்கு எதிராக புதிதாக சார்த்துகை செய்யப்பட்ட விடயம் தொடர்பில் சேனாவிடம் இருந்து விளக்கம் கோரப்பட்டது.

அந்த விசாரணையின் பின்னர் விசாரணைக் குழுவின் தலைவர் அவ்விசாரணைக்கான தனது அறிக்கையை, துணைவேந்தருக்குச் சமர்ப்பித்திருந்தார். அவ்வறிக்கையின் மீது தங்கியிருந்து சேனாவினை, துணைவேந்தர் பதவிநீக்கம் செய்தார். தன்னுடைய வேலை நீக்கம் தொடர்பாக உமது ஆலோசனையை சேனா கோருகிறான்.

அவனுக்கு ஆலோசனை வழங்குக.

08. நிர்வாக அதிகாரி ஒருவருக்கு செயற்படுவதற்கான வழங்கப்பட்டுள்ள தன்மதி அதிகாரம் எனப்படுவது தான்தோன்றித்தனமாக செயற்படுவதற்கான அதிகாரமாக இருக்க மாட்டாது. அது, ஒரு பரிபூரண அதிகாரமல்ல என்பதுடன், அவ் அதிகாரியினை தன்மதி அதிகாரங்களுக்கு அப்பால் மேலதிகமான பிரயோகிப்பதற்கும் நியதிச்சட்ட மட்டுப்பாடுகள் மற்றும் நல்ல ஆட்சிக்கான விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை புறக்கணித்தலுக்குமான அதிகாரமாகக் கொள்ளப்படக் கூடாது.

மேற்போந்த கூற்றினை நீதியியல் கட்டுப்பாட்டின் கீழ் தன்மதி அதிகாரம் என்பது தொடர்பில் நுணுக்கமாக ஆராய்க.

பதிப்புரிமையுடையது.